DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. – 151/2024

Prosecution PW – 30

| Name | வேல்முருகன் | Occupation |
|---|---|---|
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 14.05.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A4, A6 to A10 are present. A5 Not present Petition U/s 355 BNSS filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் அய்யம்பேட்டை காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.05.2024 ம் தேதி நான் காவல் நிலையத்தில் இருந்த போது வழக்கறிஞர் ரமேஷ் என்பவர் இவ்வழக்கு சம்பவத்தை தனது Vivo Y 22 என்ற செல்போனில் வீடியோவாக பதிவு செய்துள்ளதாக ஆய்வாளர் ஐஸ்வரியாவிடம் சொல்லி செல்போனை ஒப்படைத்து அதில் உள்ள வீடியோவை காண்பித்தார். ஆய்வாளர் செல்போனை என்னிடம் கொடுத்து அந்த செல்போனில் உள்ள வீடியோவை Pen Drive ல் பதிவிறக்கம் செய்து தருமாறு என்னிடம் கூறினார் . அதன் பேரில் நான் காவல் நிலையத்தில் இருந்த HP கணினியின் மூலம் HP Pen Drive ல் பதிவிறக்கம் செய்து HP Pen Drive வை பிரிவு 65 (b ) இந்திய சாட்சிய சட்டத்தின்படி சான்று வழங்கி ஆய்வாளர் ஐஸ்வரியா அவர்களிடம் ஒப்படைத்தேன். அந்த சான்று தான் என்னிடம் காண்பிக்கப்படுவது. அந்த சான்று அ.த.சா.ஆ 25 . சாட்சி பதிவிறக்கம் செய்த

HP Pen Drive வை ஆய்வாள்ர ஐஸ்வரியா இவ்வழக்கில் தாக்கல் செய்யாததால் HP Pen Drive சாட்சியின் மூலமாக குறியீடு செய்ய முடியவில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>**

வழக்கறிஞர் ரமேஷ் செல்போனை ஆய்வாளரிடம் ஒப்படைத்து ஆய்வாளர் என்னிடம் கொடுத்து அதில் உள்ள வீடியோவை பதிவிறக்கம் செய்யச்சொல்லி அதன்பேரில் பதிவிறக்கம் செய்ததாக ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. HP Pen Drive ஆய்வாளரிடம் பதிவிறக்கம் செய்து ஒப்படைத்ததாகவும், சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் ஆய்வாளரிடம் பதிவிறக்கம் செய்யப்பட்ட HP Pen Drive வை ஒப்படைத்தேன். ரமேஷ் ஒப்படைத்த செல்போனின் கலர் குறித்து ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். ஆய்வாளர் என்னை 25.04.2024 ம் தேதி விசாரித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

-Sd-
அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்